அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் : 20 / 2018
தேதி : 03.02.2018

உலக கோப்பை வென்ற இளம் இந்திய கிரிக்கெட் அணிக்கு

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
நிறுவனத்தலைவர் ரா.சரத்குமார் வாழ்த்து

19 வயதிற்குட்பட்ட உலக கோப்பை ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி மகத்தான வெற்றி பெற்றிருப்பதற்கு என் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதுவரை நடந்த 7 போட்டிகளில் நான்காவது முறையாக கோப்பையை வென்றிருக்கும் சாதனையைப் படைத்திருக்கிறது இந்திய இளைஞர் அணி. அதிலும் இந்த தொடரில் ஒரு போட்டியில் கூட தோல்வியடையாமல், இறுதிப்போட்டியிலும் வென்றிருக்கும் சாதனையையும் இந்திய இளைஞரணி படைத்திருப்பது பெருமிதமாக உள்ளது.

இந்த வெற்றி, இந்திய இளைஞர்களை விளையாட்டுத்துறையில் பெரிய எண்ணிக்கையில் ஈடுபடவைத்து, அனைத்து விளையாட்டுகளிலும், உலக அரங்கில் சாதனை படைப்பதற்கு ஊக்கப்படுத்துவதாக அமையும் என்ற நம்பிக்கையை விதைத்திருக்கிறது.

உலக கோப்பையை வென்றிருக்கும் இளம் இந்திய கிரிக்கெட் அணி வீரர்கள் அனைவருக்கும், பயிற்சியாளர் ராகுல் திராவிட் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும், பிசிசிஐ அமைப்புக்கும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்றி வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

**ரா.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை - 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com